கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No. 25/2023

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 05 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 01- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திலகவதி | வயது | 26 |
| கணவர் பெயர் | வினோத்குமார் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள் .)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது குமாரமங்கலத்தில் வசித்து வீட்டுக்குடித்தனம் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1 வது எதிரி எனது கொழுந்தனார் ஆவார். 2 வது எதிரி கொழுந்தனாரின் மனைவி ஆவார். கடந்த 14.03.2022 ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது எனது கணவர் அப்போதுவெளியூரில் இருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் அண்ணன் தம்பி சொத்து பிரச்சனை காரணமாக என்னை கர்பிணி என்று பாராமல் 2 வது எதிரி சரண்யா எனது கையை பிடித்து குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமாக திட்டினார். அப்போது 1 வது எதிரி என்னை சுவற்றில் தள்ளி மோதி கர்பிணி என்று பாராமல் வயிற்றில் எட்டி உதைத்தார்.

2) அப்போது எனக்கு மயக்கம் ஆகிட்டது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை குடவாசல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு மருத்துவர்கள் என்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனது கர்பம் கலைந்துவிட்டதாகவும் மருத்துவர்கள் கூறினார்கள். அங்கு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம்

என்னுடையதுதான். ( **அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சிகள் வந்திருந்தும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.